| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 21.01.2026 | |
| CC.No. 100/2025 | |
| சாட்சி : PW4 | |
| பெயர் : திரு.அழகர்சாமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.ராமசாமி | தொழில் : கூலி |
| கிராமம் :அம்மாபட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 60/2026 |
| ( எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர் ) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 உள்ஊர்க்காரர் தெரியும். எதிரிகளை தெரியும், அவர்கள் அ.சா.1 க்கு சம்பந்திகள். இருவருக்கும் என்ன தகராறு என்று எனக்கு தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

**சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. எனது வீட்டிலிருந்து பொன்னுச்சாமி வீடு சுமார் அரை கி.மீ தூரம் இருக்கும்.எதிரிகள் அ.சா.1 னோடு சம்மந்தம் செய்த பின்பு ஊருக்கு வர, போக இருந்த வகையில் அவர்களை எனக்கு தெரியும். பொன்னுச்சாமி ஒரு முறை பால்டாயில் குடித்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 06.01.2021 ம் தேதி 1ம் எதிரி அ.சா.1 ஐ உதைத்திவிட்டதாகவும் அந்த மனநிலையில் அவர் பால்டாயிலை குடித்துவிட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. அதனை தொடர்ந்து 09.01.2021 ம் தேதி அ.சா.1 னின் மகள் தவசியும் மைத்துனர் கருப்பையாவும் எதிரிகளிடம் சென்று நடந்ததை கேட்ட போது வாக்குவாதம் ஏற்பட்ட விபரம் தெரியும் என்று சொன்னால்

சரியல்ல. அதனை தொடர்ந்து 13.01.2021 ம் தேதி அதிகாலை 03.00 மணியளவில் எதிரிகள் மூவரும் மற்றும் அடையாளம் தெரியாது நபர்களோடு ஆபாசமாக பேசி 1ம் எதிரி கையில் வைத்திருந்த உருட்டு கட்டையால் தவசியையும், அ.சா.1 யையும் மாறி மாறி அடித்தாகவும் 2ம் எதிரி அந்த உருட்டு கட்டையை வாங்கியதாகவும், 3ம் எதிரி ஆபாசமான வார்த்தைகளால் திட்டியதாகவும் 1ம் எதிரி உருட்டு கட்டையை காட்டி என்னைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல்விடமாட்டேன் என்று மிரட்டி சென்றதாகவும் இருவருக்கும் காயம் ஏற்பட்டதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகள் பழக்கமானவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

3. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் இது சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் சாட்சியம் அளிக்க வரச்சொன்னதன் பெயரில் வந்துள்ளேன் என்றால் ஆமாம்.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 21.01.2026 | |
| CC.No. 100/2025 | |
| சாட்சி : PW5 | |
| பெயர் : திரு.பொன்னுச்சாமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. | தொழில் : கார்பெண்டர் |
| கிராமம் :அம்மாபட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 53/2026 |
| ( எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர் ) | |

---------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 5, 6 வருடத்திற்கு முன்பு போலீசார் அம்மாபட்டிக்கு வந்திருந்தார்கள். கண்ணுச்சாமி டீ கடைக்கு அருகே நான் நின்றுகொண்டிருந்தேன். அப்போது காலை 08.00 மணியிருக்கும். ஒரு எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் கேட்டார்கள், நான் கையொப்பம் செய்தேன். **பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. எனது வீட்டிலிருந்து பொன்னுச்சாமி வீடு சுமார் 6, 7 வீடு தள்ளியுள்ளது. பொன்னுச்சாமி வீடானது அம்மாபட்டி – ஊத்துக்குழி ரோட்டில் கிழக்கு பகுதியில் உள்ளது என்றால் ஆமாம். அந்த ரோட்டில் மேற்கு பகுதியில் அஞ்சலை வீடு, கொடுக்காய்புலி மரம், போஸ் வீடு மற்றும் காலியிடம் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். 5 வருடத்திற்கு முன்பு தவசிக்கு தலையில் அடிப்பட்டு மருத்துவமனைக்கு சென்ற விபரம் எனக்கு தெரியும்.

பொன்னுச்சாமிக்கும் காயம் பட்ட விபரம் எனக்கு தெரியும், எதனால் என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரி ராசா என்பவரின் மருமகன் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எந்த வகையில் மருமகன் என்றால் அவரது அண்ணனை அ.சா.1 தனது மகளுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார். பெண் கொடுத்த வகையில் இருகுடும்பத்தாருக்கும் தகராறு ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 11.01.2021 ம் தேதி எதிரிகளுக்கும், அ.சா.1 குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட தகராறு சம்மந்தமாக மாலை 06.30 மணிக்கு வளநாடு காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

3. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் இது சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நிரப்பாடாத வெள்ளை தாளில் மட்டும் என்னிடம் கையொப்பம் வாங்கி சென்றார்கள் என்றால் சரிதான். கையெழுத்து காலை 10.00 மணிக்கு வாங்கினார்களா என்றால் காலை 08.00 மணிக்கு வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பொன்னுச்சாமியை எதிரிகள் தான் அடித்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் நான் பார்க்கவில்லை.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 21.01.2026 | |
| CC.No. 100/2025 | |
| சாட்சி : PW6 | |
| பெயர் : திரு.கண்ணுச்சாமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. குருநாதன் | தொழில் : விவசாயம் |
| கிராமம் :அம்மாபட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 55/2026 |
| ( எதிரிகள் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர் ) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 5, 6 வருடத்திற்கு முன்பு பொன்னுச்சாமிக்கும் அவரது மருமகன் குடும்பத்தாருக்கும் தகராறு நடந்தது. அன்று காலை போலீசார் 07.00, 08.00 மணியளவில் வந்து கையொப்பம் பெற்றார்கள். முதல் நடந்த சண்டை சம்மந்தமாக விசாரிக்க வந்திருப்பதாக சொல்லி எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றார்கள். பொன்னுச்சாமியும், நானும் கையொப்பம் செய்தோம். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**சாட்சி அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. எனது வீட்டிலிருந்து பொன்னுச்சாமி வீடு சுமார் 10 வீடு தள்ளியுள்ளது. போலீசார் எங்கு வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் எனது வீட்டிற்கு அருகே வைத்து வாங்கினார்கள், அங்கே தான் பொன்னுச்சாமியும் கையொப்பம் செய்தார். எதிரிகளை சம்மந்தம் செய்த வகையில் தெரியும். கடந்த 11.01.2021 ம் தேதி எதிரிகளுக்கும், அ.சா.1 குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட தகராறு சம்மந்தமாக மாலை 06.30 மணிக்கு வளநாடு காவல் உதவி ஆய்வாளர் சம்பவ

இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

3. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் இது சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நிரப்பாடாத வெள்ளை தாளில் மட்டும் என்னிடம் கையொப்பம் வாங்கி சென்றார்கள் என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்திற்கும் எனது வீட்டிற்கும் சுமார் அரை கி.மீ தூரம் இருக்குமா என்றால் அரை கி.மீ க்குள் இருக்கும். எனது வீட்டில் வைத்து தான் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஆமாம். பொன்னுச்சாமியிடமும் எனது வீட்டு அருகே வைத்து வாங்கினார்கள் என்றால் ஆமாம். நான் கையெழுத்து செய்த பேப்பர் வெற்று பேப்பராக இருந்தது என்றால் ஆமாம். இந்த சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் ஆமாம். போலீசார் சாட்சியம் அளிக்க வரச்சொன்னதன் பெயரில் வந்துள்ளேன் என்றால் ஆமாம்.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.